# 'தங்களின் பாரம்பரிய பிரதேசங்களில் வாழவே தமிழர்களுக்கு இன்று பாதுகாப்பு கிடையாது'

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 1-1-86 புதன் (மார்கழி 17 ரபியு ஆகிர் 19) முழக்கம் 327

## பேராசிரியர் சிவத்தம்பி பேச்சு

1958, 1977 ஆம் ஆண்டுகளின் கலவரங்களுக்கு முன்னர் தென் பகுதிகளில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்ந்து வந்தனர். ஆனால் 1983க்கு பின்னர் வடக்கு கிழக்கு பகுதிகளான தமது பாரம்பரிய பிரதேசங்களில் கூட உரிமையுடனும் பாதுகாப்புடனும் அவர்களால் வாழமுடியவில்லை. இதன் பின்னர்தான் தமிழ்மக்கள் தேசிய வாத உணர்வைப்பெற்றனர் என்று பேராசிரியர், கே. சிவத்தம்பி கூறினர். அமரர் ஹண்டி பேரின்பநாயகம் நினைவு தினம் நிகழ்ச்சி யாழ்-சென். ஜோண்ஸ் கல்லூரி மண்டபத்தில் ஒறேற்றர் சுப்பிரமணியம் தலைமையில் நேற்று நடைபெற்ற போது பேராசிரியர் சிவத்தம்பி மேலும் பேசுகையில் 1958ம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் ஆயுதப்படை அதிகரிக்கப்பட்டு வருகிறது. சத்தியாக்கிரகத்தின் பின் இது மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தமிழ் போராளிகள் இன்று நடாத்தும் போராட்டங்களிடையே மட்டுமல்ல தெற்காசிய நாடுகளிலும் முக்கிய இடத்தை பெறுகின்றன. திம்பு பேச்சுவார்த்தைக்கு தமிழ் தீவிரவாதிகளை அங்கீகரித்ததே இதற்கு சான்றாகும். 6ம் பக்கம் பார்க்க

★ இனப்பிரச்சினைத் தீர்வு, வம்சாவழியினர் ஏற்கும் விடயங்களில்

# ராஜீவ் விதித்த நிபந்தனையில் எந்த மாற்றமும் இருக்காது!

## கூட்டணி யோசனைகளைப் பரிசீலிக்குமாறும் பாரதத் தூதுவர் டிக்ஸிற் மூலம் அறிவிப்பு

இலங்கைத் தமிழர் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அண்மையில் விதித்த நிபந்தனைகளிலிருந்து மாறும் நிலையில் இல்லை என்று இந்தியா இலங்கை அரசுக்கு உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளதாகவும், தூதுவர் ஜே. என். டிக்ஸிற் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்ததாகவும் நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்துள்ள திட்டத்தைப் பரிசீலித்து அதன் மூலம் உடன்பாடு காண்பதற்கு இலங்கை அரசு முன்வர வேண்டும் என்றும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் தூதுவர் திரு. ஜே. என் டிக்ஸிற் கேட்டுக்கொண்டுள்ளார்.

கூட்டணியினரின் இத் திட்டத்தை அரசாங்கம் பரிசீலித்திருப்பதாகவும் இலங்கையுடன் பாரதம் இவ் விடயத்தில் ஒத்துழைக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி ஜெயவர்த்தன தூதுவர் டிக்ஸிற்றிடம் இச் சந்திப்பின்போது வேண்டுகோள் விடுத்தார்.

— 6ஆம் பக்கம் பார்க்க

## வட்டக்கச்சி வசீகரனுக்கு துப்பாக்கிச் சூடு

நேற்றுப் பிற்பகல் ஐந்தரை மணியளவில் கிளிநொச்சியில் சைக்கிளில் சென்று கொண்டி ...6 ஆம் பக்கம் பார்க்க

### தமிழகம் சென்று

## தமிழீழ போராளிகளுடன் பெர்னுட் சொய்ஸா பேச்சு

(கொழும்பு)

லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. பெர்னுட் சொய்ஸா தமிழ் நாடு சென்று அங்கு தமிழீழப் போராளிகளின் முக்கிய பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இனப் பிரச்சினையின் தற்போதைய நிலை, போராளிகளின் எதிர்பார்க்கும் முடிவு ஆகியன பற்றி சம்பந்தப்பட்டவர்களுடன் தாம் மனம் திறந்து பேசியதாகவும், சமசமாஜக் கட்சியின் நிலைப்பாடுபற்றியும் அவர்களிடம் தெரிவித்ததாகவும் கொழும்பு திரும்பிய திரு. பெர்னுட் சொய்ஸா தெரிவித்தார்.

—6-ம் பக்கம் பார்க்க

### கூட்டணி அரசியல் குழு வேண்டுகோள்

## தமிழர் படுகொலை அதிகரிப்பு; தட்டிக் கேட்க எவருமில்லையா?

(சென்னை)

இலங்கையில் இடம்பெறும் கலவரங்களாலும் படையினரின் தாக்குதலகளாலும் தத்தமது கிராமங்களை விட்டு வெளியேறும் தமிழர்களைப் பாதுகாப்புப் படையினர் அச்சுறுத்தியும், பயமுறுத்தியும் வருவதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியற் குழு சென்னையில் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில தெரிவித்துள்ளது.

இவ்வாறு வெளியேறும் தமிழர்கள் மீண்டும் தமது இல்லங்களுக்குச் செல்வதனையும் படையினர் தடுத்து வருவதாகவும், இவ்வாரம் நிலாவெளியில் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பத்துப் பேரும் அப்பாவித் தமிழர்களே எனவும் இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

—6ம் பக்கம் பார்க்க

### ராஜீவ் முடிவுக்கு எம். ஜி. ஆர். பாராட்டு

## ஈழத் தமிழர் இன்னல் தீர தமிழக தலைவர்கள் வாழ்த்து

(சென்னை)

தமிழக அரசியல் தலைவர்கள் பலரும் புதுவருடத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்திகளில் ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு இவ்வாண்டில் ஒரு முடிவு காணப்பட்டு அவர்கள் சுதந்திரமான வாழ்க்கையைப்பெற வேண்டும் என்ற நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்கள்.

முதல்வர் திரு. எம்.ஜி.இராமச்சந்திரன் வெளியிட்டுளள செய்தியில், பிரதமர் ராஜீவ் காந்தி மலையகத் தமிழர்களை ஏற்பது தொடர்பாக வெளியிடட கருத்துக்கு பாராட்டுத் தெரிவித்துளளார் ராஜீவ்காந்தியின நலல முயற்சிகளை வீணாக்கும் வகையில் இலங்கையில் இராணுவம் அப்பாவித் தமி

...6ஆம் பக்சம் பார்க்க

## இன்டர்சிறறி இன்று முதல் டிக்கட் 150 ரூபா

யாழ்ப்பாணம் - கொழும்பு இன்டர்சிற்றிக்கான கட்டணம் இன்று முதல் 150 ரூபாவாகும். நேற்று வரை இக்

6ஆம் பக்கம் பார்க்க

## கோட்டை முகாமிலிருந்து விடுதலையான 21 பேர்விபரம்

நேற்று முன்தினம் கோட்டை ராணுவமுகாமில் இருந்து விடுவிக்கபபட்ட இருபத்தொரு இளைஞர்களின் பெயர்கள் பின்வருமாறு:-

யேசு செபஸ்ரியன்; செல்வரட்ணம் ஜெயசிங்கம்; பாலசுப்பிரமணியம் பாலச்சந்திரன், அருணன் ஜீவநாதன்; கணபதிப்பிள்ளை விஜயரட்ணம்; மாணிக்கம் ராசரட்ணம்; மாணிக்கம் தேவராசா; செல்லத்துரை மனிதராசா, ராயப்பு செல்வராசா; சிங்கராசா சேகர்; விஸ்வலிங்கம்

...6ம் பக்கம் பார்க்க

## ராஜீவை, எம். ஜி. ஆரை சந்திக்க தொண்டா முடிவு

(மதுரை)

பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தியை எதிர்வரும் பத்தாம் திகதி அளவில் தான் சந்தித்துப் பேசவிருப்பதாக இலங்கை கிராமியத் தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் மதுரையில் செய்தியாளரிடம் பேசுகையில் சொன்னர்.

இலங்கையில் வாழும் நான்கு இலட்சம் பிரஜாவுரிமையற்ற இந்திய வம்சாவழி மக்களுக்கு உடனடியாகப் பிரஜாவுரிமை வழங்க வேண்டும் என்ற விடயம் குறித்து தான் பிரதம மந்திரியுடன் சம்பாஷிக்கவுள்ளதா

—6ஆம் பக்கம் பார்க்க

## ஒரு லட்சம் ரூபா சன்மானம

இரண்டு தினங்களுக்கு முன்னர் இனம் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட அக்கரைப்பற்று உப தபாலதிபர்

... 6ஆம் பக்கம் பார்க்க

## யாழ். மாவட்ட வீடமைப்பு வேலைக்கு 52 லட்சம் ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வீடுகட்ட, வீடுதிருத்த வேலைகளுக்கென அடுத்தாண்டில் கடன்வழங்கவென ஐம்பத்திரண்டு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பிச்சைச் சம்பளம் எடுப்பவர்களுக்கு இலவசமாக வழங்

...6ம் பக்கம் பார்க்க

தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகை ஈழமுரசு

## வரி விளம்பரம்

**வீடு, காணி விற்பனை**

யாழ். கொட்டடி சீனிவாசகம் வீதியில் 2 1/4 பரப்பு காணியும், வீடும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். R/15238

**பாடசாலை சேவை**

ஜனவரி 6 ஆம் திகதி திங்கள் முதல் பாடசாலை மாணவ, மாணவியருக்கு பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இச்சேவை திருநெல்வேலியில் இருந்து நகரின் பிரதான பாடசாலைகளுக்கு செல்லும். விபரங்களுக்கு- ராம்கரன் புத்தக நிலையம், திருநெல்வேலி சந்தி. தொலைபேசி: 22752. R/15241

**தவறிவிட்டது**

சங்கரப்பிள்ளை விநாயகமூர்த்தி (மறுபெயர் நல்லையா) முல்லைத்தீவு ரோட், நெடுங்கேணி ஆகிய எனது அடையாள அட்டை யாழ். பெரியாஸ் பத்திரியில் 30-12-85 அன்று தொலைந்துவிட்டது. கண்டெடுப்பவர்கள் 37,கண்டி வீதி, ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் உண்டு. R 15245


## அச்சுவேலியில் ஒலி, ஒளி நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து வந்து அச்சுவேலி முகாமிலுள்ள மக்களின் புனர்வாழ்வு நிதிக்காக அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை ஒலி, ஒளி நிகழ்ச்சி நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

காட்சியும் கானமும் டிஸ்கோ நடனம் என்பனவும் இடம்பெறும் இந் நிகழ்ச்சிகளின் தொகுப்பு அறிவிப்பாளராகப் பிரபல அறிவிப்பாளர் திரு. கே. எஸ். ராஜா கலந்து கொள்கிறார்.

அச்சுவேலி முகாமிலும் சுற்றுவட்டாரத்திலுள்ள தனியார் வீடுகளிலும் 104 குடும்பங்களைச் சேர்ந்த 400 அகதிகள் உள்ளனர் என்று முகாம் பொறுப்பாளர் திரு. ரி. எம். யோசேப் தெரிவித்துள்ளார்.

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

பேராதனை விவசாயத் திணைக்களத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய திரு.கா. வீரசிங்கம் அண்மையில் கிளிநொச்சி கச்சேரிக்கு கணக்காளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளியல்/கணக்கியலில் சிறப்புப் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இப்படியும் சோதனை

நாவற்குழி இராணுவ தடை முகாமில் தற்போது பயணிகளின் அடையாள அட்டை மட்டுமின்றி பஸ் பயணச்சீட்டுக்களும் பரிசோதிக்கப்படுகின்றன. இதேவேளை கடந்த சில நாட்களாக இப்பாதையினூடாக சேவையில் ஈடுபடும் மினி பஸ்களின் காப்புறுதி, வாகன அனுமதிப்பத்திரங்களும் இங்கு வைத்து பரிசோதிக்கப்படுவதனால் அநேகமான மினி பஸ்கள் கோப்பாய் - கைதடி பாதையினூடாகவே தமது சேவையை தற்பொழுது நடாத்துகின்றன.

## 4 மாணவர் சித்தி

(அச்சுவேலி)

அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் நான்கு மாணவர்கள் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

சித்தியடைந்தோர் விபரம்:- செல்வன் க.முரளிதரன், செல்வன் க. சிறிமோகன், செல்விகள்:- க. விஜிதா, சி சுமந்தினி

## நல்லூர் ச. ச. நிலையம் ஆணையாளருக்கு நன்றி

(கல்வியங்காடு)

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவுக்கான பொதுக்கூட்டம் நடைபெற்றது.

யாழ். மாநகர ஆணையாளரினால் இருபத்தையாயிரம் ரூபா வழங்கப்பட்டு நிலையத்தின் மேல்மாடிக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதால் நிலையத்தின் சார்பில் ஆணையாளருக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நிலையக் கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கு வெளிநாட்டிலிருந்து நண்பர்கள் அனுப்பிய அன்பளிப்புகளுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

ஏனைய நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சிறுவர் பூங்காவுக்குரிய உபகரணங்கள் போன்று இந்நிலையத்துக்கும் வழங்க வேண்டும் என்று மாநகரசபை ஆணையாளரைக் கேட்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்; தலைவர்: திரு ச. கருணைநாதன், ஜே. பி. உப தலைவர்: திரு. எம். எஸ்.துரைராசா, செயலாளர்: திரு வை. நாகேந்திரம்,உப செயலாளர்: திரு. ஏ. ஜெயகுமார், பொருளாளர்; திரு கா.இரகுநாதன். நிர்வாக சபை உறுப்பினர்களாக எண்மர் தெரிவாகினர்.

## கற்பிட்டி தபாலதிபர்

(கொடிகாமம்)

முல்லைத்தீவு தபால் அலுவலகத்தில் பதில் தபாலதிபராகக் கடமை புரிந்த எப். என். சூசைப்பிள்ளை கற்பிட்டி தபாலலுவலக தபாலதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பிறந்தநாள் வாழ்த்து

✱ கிளிநொச்சி கண்டி வீதி, பூலோகநாதன் வாகீஸ்வரி தம்பதியின் மகன் நிஷாந்தன் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✱ வட்டுக்கோட்டை, சேதுகாவலன் ஆனந்தபவானி தம்பதியின் மகள் அபிராமி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✱ அராலி தெற்கு, கிஷ்ணமூர்த்தி இராசலெச்சுமி தம்பதியின் மகள் கிருஷ்ணமதி இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✱ கைதடி கிழக்கு, முருகேசு வரதலட்சுமி தம்பதியின் மகள் சியாமிளா இன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✱ மிருசுவில் பழைய வாய்க்கால், மரிசலீன் கமலா தம்பதியின் மகன் சுகந்தன் இன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✱ சுன்னாகம் ஏழாலை தெற்கு, யோண்துரைராஜா நாகபூசனி தம்பதியின் மகள் அமுதா இன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✱ காரைநகர் வாரிவளவு, நமசிவாயம் மகேஸ்வரி தம்பதியின் மகன் சிவராசன் இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✱ அரியாலை, திருநாவுக்கரசு புனிதவதி தம்பதியின் மகன் ஜெயந்தன் இன்று தனது பன்னிரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

✱ கிளிநொச்சி திருநகர், குணரத்தினம் சரோஜினி தம்பதியின் புதல்வர்கள் கோபு, கோபிகா இன்று தமது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்கள்.

## தீவுப்பகுதியில் பயணிகள் சங்கம்

(வேலணை)

தீவுப்பகுதி பிரயாணிகள் நலனை உத்தேசித்து தீவுப்பகுதி பிரயாணிகள் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் அமைப்புக் கூட்டம் திரு. க. நடராசா தலைமையில் சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் இச்சங்கத்தின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு. க. நடராசா, உபதலைவர் திரு. ஆர். நகுலேசப்பிள்ளை ஜே. பி.,செயலாளர் திரு.எஸ். சிவலிங்கம், துணைச் செயலாளர் திரு. ஐ.யா. யோசேப், பொருளாளர் திரு. சு. பழனிவேற்பிள்ளை. ஐவர் செயற்குழுவுக்குத் தெரிவாகினர்.


## சேவைகள்

1. யாழ். பஸ் நிலையம் முன்பாக, ஆஸ்பத்திரி வீதியில், எவ்வித வியாபாரத்திற்குமுகந்த வியாபார தலத்தைப் பொறுப்பேற்று நடாத்தப் பங்காளர் தேவை.
2. வீடியோ அல்லது ரெலிவிசன், றேடியோ, வாச் ரிப்பியர் சென்ரர் நடாத்தக் கூடிய இடம் வாடகைக்குண்டு.

தொடர்பு:

**மல்ரி சேவிசஸ்**

37 (351), மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்திக் கருகாமையில்)
யாழ்ப்பாணம். பி 973.


## யாழ். அபிவிருத்திச் சபையின் 1986-ம் ஆண்டு அபிவிருத்திச் செயல்முறைத்திட்டமும் வரவு செலவுத்திட்டமும்.

1980ம் ஆண்டின் 35ம் இலக்க அபிவிருத்திச்சபைகள் சட்டத்தின் 40ம் பிரிவுக்கு இணங்க 1986ம் ஆண்டுக்கான அபிவிருத்திச்செயல்முறைத்திட்டமும், வரவு செலவுத்திட்டமும் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக யாழ். அபிவிருத்திச் சபைத் தலைமை அனுவலகத்தில் 01-1.1986ந் திகதி தொடக்கம் 9-1-1986ந் திகதிவரை வைக்கப்பட்டுள்ளது.

வை. மு. பஞ்சலிங்கம்,
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை.

அபிவிருத்திச்சபை அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
1985-12-30. (பி. 975)


பாட்டுப்பிரியர்களுக்கு ஓர்
★ புத்தாண்டு நற்செய்தி ★
இலங்கையின் முதல் ஓடியோ கிளப்

## இன்று முதல் ஆரம்பம்

ஒலிப்பதிவு செய்த ஒறிஜினல் பாட்டுக் கசற்றுகள் வாடகைக்கு.

நியூவிக்ரேஸ்
23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**மலிவு விற்பனை.-**

இன்று ஒரு நாள் மட்டும் (1-1-86)

மக்சல் ஒறிஜினல் கசற் — ரூபா-21.50 (பழைய விலை 24/-)
மக்சல் பாடல்கள் பதிவு செய்த கசற்-ரூபா-29.50 (பழைய விலை 35/-)

**நியூவிக்ரேஸ்**
23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 23532. (பி. 977)



## கிளிநொச்சி

கிளிநொச்சி குமரன் கிளினிக்கில் நடைபெற்று வந்த பல் வைத்திய நிலையம், இனிமேல் ஒவ்வொரு ஞாயிறும் காலை 8 மணி தொடக்கம 1-30 வரை கிளிநொச்சி ரஞ்சன் கிளினிக்கில் நடைபெறும். R15234



★ SAFETY TRAVELS ★

பாடசாலை சேவை

**ஆதரவாளர் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

எமது பாடசாலை பஸ்சேவை அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் 6-1-86 முதல் ஆரம்பமாகும் என்பதை தெரியப்படுத்துகின்றோம். காலையில் மட்டும் (One way) பிரயாணம் செய்யவும், வசதியளிக்கப்படும். புதிதாக சேருவோர் எமது பஸ்ஸில் எமது சாரதியுடன் தொடர்பு கொள்ளலாம்.

நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

SAFETY TRAVELS,
102, 3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

JIRU ACADEMY,
(MPCS அருகாமை)
பிரதான வீதி, சங்கானை.

(பி. 976)

# ஈழமுரசு 1986 கலண்டர்

## ஜனவரி

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## பெப்ரவரி

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | |

## மார்ச்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

## ஏப்ரல்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

## மே

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## ஜூன்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## விடுமுறை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 14 | தைப்பொங்கல் தினம் | OX |
| பெப். | 04 | சுதந்திர தினம் | OXǒ |
| மார்ச் | 08 | மஹா சிவராத்திரி தினம் | OX |
| | 28 | பெரிய வெள்ளிக்கிழமை | OX |
| ஏப்ரல் | 13 | வருடப்பிறப்புக்கு முதல்நாள் | OXǒ |
| | 14 | தமிழ் சிங்கள வருடப்பிறப்பு | OXǒ |
| மே | 01 | மே தினம் | OXǒ |
| | 22 | தேசிய வீரர்கள் தினம் | OXǒ |
| | 24 | வெசாக் தினத்திற்கு மறுநாள் | OXǒ |
| ஜூன் | 10 | றம்ழான் தினம் | OX |
| | 30 | விசேட வங்கி விடுமுறை | X |
| ஆகஸ்ற் | 17 | ஹஜ்ஜுப் பெருநாள் | O |
| நவம்பர் | 01 | தீப வளி தினம் | OX |
| | 15 | முகமது நபிகள் பிறந்த தினம் | OX |
| டிசம்பர் | 25 | நத்தார்ப் பண்டிகை | OXǒ |
| | 31 | விசேட வங்கி விடுமுறை | X |

O அரசாங்க X வங்கி ǒ வர்த்தக விடுமுறை

## போயா (முழு நோன்மதி தினம்)

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 25 சனி | ஜூலை | 20 ஞாயிறு |
| பெப். | 24 திங்கள் | ஆகஸ்ற் | 19 செவ்வாய் |
| மார்ச் | 25 செவ். | செப். | 17 புதன் |
| ஏப்ர | 24 வியா. | ஒக்ரோ. | 17 வெள்ளி |
| மே | 23 வெள்ளி | நவம்பர் | 15 சனி |
| ஜூன் | 21 சனி | டிசம்பர் | 15 திங்கள் |

## இந்துக்களின் விசேட தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி | 14 | தைப்பொங்கல் |
| | 26 | தைப்பூசம் |
| பெப். | 24 | மாசிமகம் |
| மார்ச் | 08 | மஹா சிவராத்திரி |
| | 25 | பங்குனி உத்தரம் |
| ஏப்ரல் | 14 | க்ஷய வருஷப்பிறப்பு |
| | 18 | ஸ்ரீராம நவமி |
| | 24 | சித்திரா பௌர்ணமி |
| மே | 03 | திருநாவுக்கரசர் குருபூசை |
| | 23 | வைகாசி விசாகம் |
| | 25 | திருஞானசம்பந்தர் குருபூசை |
| ஜூலை | 11 | மாணிக்கவாசகர் குருபூசை |
| | 13 | ஆனி உத்தரம் |
| ஆகஸ்ற் | 05 | ஆடி அமாவாசை |
| | 08 | ஆடிப்பூரம் |
| | 12 | சுந்தரர் குருபூசை |
| | 15 | வரலக்குமி விரதம் |
| | 27 | ஸ்ரீ ஜயந்தி |
| செப். | 07 | ஆவணிச் சதுர்த்தி |
| அக். | 03 | மஹாளய அமாவாசை |
| | 04 | நவராத்திரி ஆரம்பம் |
| | 12 | விஜயதசமி |
| நவம்பர் | 01 | தீபாவளி, கேதாரகௌரி விரதம் |
| | 02 | ஸ்கந்தஷஷ்டி ஆரம்பம் |
| | 07 | ஸ்கந்தஷஷ்டி விரதம் |
| | 16 | திருக்கார்த்திகை, ஸர்வாலயதீபம் |
| | 17 | விநாயக விரதாரம்பம் |
| டிசம். | 06 | விநாயகஷஷ்டி விரதம் |
| | 08 | திருவெம்பாவை பூஜாரம்பம் |
| | 17 | உதயம் நடேசர் தரிசனம் |

## கிறிஸ்தவப் பெருநாட்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி | 06 | ஆண்டவரின் திருக்காட்சி |
| பெப். | 12 | திருநீற்றுப் புதன் |
| மார்ச். | 28 | பெரிய வெள்ளி |
| | 30 | உயிர்ப்பு ஞாயிறு |
| மே | 08 | ஆண்டவரின் விண்ணேற்றம் |
| ஆகஸ்ட் | 15 | புனித கன்னிமரியாளின் விண்ணேற்பு |
| நவம்பர் | 01 | சகல புனிதர்கள் தினம் |
| | 02 | மரித்தவர்கள் தினம். |
| டிசம்பர் | 08 | புனித கன்னிமரியின் அமலோற்பவம். |
| | 25 | கிறிஸ்து பிறப்பு |

## இஸ்லாமியப் பெருநாட்கள்

| | | |
|---|---|---|
| ஜூன் | 10 | றம்ழான் பெருநாள் |
| ஆகஸ்ட் | 17 | ஹஜ்ஜுப் பெருநாள் |
| நவம்பர் | 15 | முகமது நபிகள் பிறந்த தினம் |

## ஜூலை

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## ஆகஸ்ட்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## செப்டெம்பர்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## ஒக்டோபர்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## நவம்பர்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

## டிசம்பர்

| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### உதய சிந்தனை

வையத்தே வாழ வழியறியா தேங்கி நின்று
நையப் புடையுண்ட நற்றமிழர் —ஐயமது
மாறவோ ராயிரத்துத் தொள்ளா யிரத்தெண் பத்
தாறுண்டே! வந்தினிதே ஆள்.
—கவியரசு முருகசூரியன்.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதய ஒலி

1-1-86 புதன்கிழமை (குரோதன) மார்கழி-17

# 1985 – வரலாற்றில் மறக்க முடியாத ஆண்டு

உலக வரலாற்றிலும், தமிழர் வரலாற்றிலும் மறக்கமுடியாத பல சம்பவங்களை ஏற்படுத்திய 1985 நேற்று விடைபெற்றுவிட்டது.

சந்திக்க முடியாதவர்களையெல்லாம் சந்திக்க வைத்துச் சர்வதேச அரங்கில் பல புதுமைகளைச் செய்த 1985, இலங்கையைப் பொறுத்த அளவில் பல சந்திப்புகளை ஏற்படுத்திய போதிலும் எந்த நன்மையையும் செய்யவில்லை.

அதற்கு மாறாக அழிவுகள் பலவற்றை உண்டுபண்ணி, தமிழரை மேலும் பல இன்னலுக்குள்ளாக்கி, பல்லாயிரக் கணக்கானவர்களை அகதிகளாக்கிவிட்டுச் சென்றுள்ளது.

தமிழர் படுகொலைகள் பற்றி ஒவ்வொரு நாட்டிலும், ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் பேசப்பட வேண்டிய நிலையை நேற்றுடன் விடைபெற்ற 1985 உருவாக்கிய தென்பதைத் தவிர வேறெந்தப் புதுமையும் தமிழர் வரலாற்றில் இடம்பெறவில்லை.

லண்டன், கனடா, நியுயோர்க், அவுஸ்ரேலியா ஆகிய இடங்களிலெல்லாம் தமிழர் பிரச்சினை தொடர்பான கருத்தரங்குகளும், மாநாடுகளும் நடத்தப்பட்டுள்ளது.

திம்பு, டில்லி என்று தென்கிழக்காசிய நாடுகளில் தலை நகர்களிலெல்லாம் இனப்பிரச்சினை தொடர்பான சந்திப்புப் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றுள்ளன.

உலக அரங்கில் தமிழர் பிரச்சினையையும், தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அரச பயங்கரவாதத்தையும் அம்பலப்படுத்தவே இவ்வாறான நிகழ்ச்சிகள் களம் அமைத்துக் கொடுத்தன.

சர்வதேச வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து, உண்மை நிலையை வெளிக்கொணர உதவியமையை 1985-ம் ஆண்டின் முக்கிய சாதனையாக எடுத்துக் கொள்ளலாம்.

நேர்ப்பாதையால் இங்கு வந்து போன வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை, வடக்குக் கிழக்குக்குச் செல்ல அரசு தடைவிதித்ததால், அவர்கள் கள்ள வழியால் வரவேண்டியேற்பட்டது.

இதன் பயனால், தமிழர் ஒழிப்புச் சம்பவங்களை செய்திகளாகவும், புகைப் படங்களாகவும், வீடியோ படங்களாகவும் தத்ரூபமாக எடுத்துச் சென்றனர்.

1985-ம் ஆண்டில் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வந்து போன வெளிநாட்டு வெகுஜனத் தொடர்புச் சாதனப் பிரதிநிதிகளின் தொகையின் மூலம், சர்வதேச மட்டத்தில் தமிழர் பிரச்சினை பெற்றிருந்த முக்கியத்துவத்தை உணரமுடிந்தது

இலங்கை அரசின் வேண்டுகோளையும் புறக்கணித்து, பி. பி. ஸி. யில் கடந்த மாதம் ஒளிபரப்பப்பட்ட திருமலைச் சம்பவங்கள் தொடர்பான வீடியோ படம், மேற்குலகின் பலரது கண்களிலும் உண்மையைப் பளிச்சிட வைத்தது.

நேற்று முன்தினம் சர்வதேச மன்னிப்புச் சபை லண்டனில் விடுத்த அறிக்கை கூட, குறிப்பிட்ட வீடியோப் படத்தின் மூலம் கிடைத்த ஒரு வெற்றியென்றே கொள்ளப்படுகின்றது.

"இலங்கையில் தமிழர்கள் சித்திரவதை செய்யப்படுகின்றார்கள்; படுகொலை செய்யப்படுகின்றார்கள்; இது பற்றி இலங்கை அரசு எந்தவிதமான அக்கறையும் கொள்வதாகத் தெரியவில்லை; பாரபட்சமற்ற விசாரணை நடத்த அரசு முன் வரவேண்டும்'' என்று குழு வேண்டுகோள் விடுத்தது.

உலக அரங்கில் தமிழர் பிரச்சினை தொடர்பாக இத்தனை குரல்கள் எழுப்பப்பட்ட போதிலும் அரசு எதனையும் செவிசாய்க்கவில்லை.

தமிழர் கொலை, சித்திரவதை, உடைமைகள் அழிப்பு, கற்பழிப்பு, தீ வைப்பு, தமிழ்ப் பகுதிகளை விட்டு வெளியேற்றம், சிறைக் கூடங்களில் தள்ளுதல் போன்ற பல்வேறு அட்டூழியங்களாலும் "சாதனை'' படைத்த ஆண்டாக 1985 இடம் பெற்றுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் வரலாற்றில் இது ஒரு கரி ஆண்டாக அமைந்துவிட்டது.

பிறந்திருக்கும் 1986 ஆவது விடுதலை ஆண்டாக மலர்ந்து, தமிழர் வாழ்வில் எல்லா நலன்களையும் அளிக்க வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

மங்களம் பொங்கி, எங்கும் தங்க வேண்டும்.

## யாழ்ப்பாணத்து உழைப்பாளிக்கு உதவுவது அவனது மூளையும், மூலவளங்களுமே!

(வயாவிளான்)

''உள்ளூர் உற்பத்திகளையும், உள்ளூரில் மறைந்திருக்கும் உலகக் கலைஞர்களுடன் ஒப்பிடக் கூடிய கலைஞர்களையும் வெளிக் கொணர்ந்து கௌரவித்த நாம் இன்று உள்ளூர் உற்பத்திகளில் ஈடுபட்டு எமது பொருளாதாரத்துக்கு உரமூட்டுபவர்களைக் கௌரவிப்பதில் பெருமைப்படுகின்றோம்''.

இவ்வாறு அச்சுவேலி லயன்ஸ் கழகம் புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் நடாத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு வைபவத்துக்கு, தலைமை தாங்கி உரையாற்றிய லயன்ஸ் கழகத் தலைவர் திரு. வ. சிதம்பரப்பிள்ளை கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ''கடின உழைப்புக்குப் பெயர் போன யாழ்ப்பாண உழைப்பாளி தனது மூளை வளத்தினையும், மூலவளத்தினையும் பயன்படுத்தி தனது சொந்தக்காலில் நிற்கும் நிலைக்குத் தன்னைத் தயார் படுத்துகின்ற போது அத்தொழிலினை மையமாக வைத்து உருவான சாதியமைப்பு இடைக்கிடை தனது சுய ரூபத்தை வெளிக்காட்டி முட்டுக்கட்டை போடுவதனை முற்று முழுதாக நாம் உடைத்தெறிய வேண்டும். இதன் அடிப்படையிலேயே இன்று எமதுவிழாவுக்கு கௌரவவிருந்தினராக வெவ்வேறுபட்ட தொழில் புரிபவர்கள் அழைத்து அவர்களைக்கொண்டே அதிர்ஷ்டலாபச் சீட்டினையும் இழுப்பிக்கின்றோம்'' என்று கூறினார்.

இவ்வைபவத்துக்கு பிரதம விருந்தினராகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளையும், சிறப்பு விருந்தினராக லயன்ஸ் கழக மாவட்டப் பிரதி ஆளுநர் லயன் கே. வி. முத்துக்குமாரசாமியும், கௌரவ விருந்தினர்களாக, திராட்சை உற்பத்தியாளர் திரு. சி. தாமோதரம்பிள்ளை, கைத்தொழிலதிபர் திரு. க. அமிர்தலிங்கம், கற்பக தொழில் வல்லுநர் (சீவற் தொழிலாளி) திரு. பொ. சுந்தரம் வைத்திய கலாநிதி திரு. எஸ். சரவணபவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இடம் பெயர்ந்தோர் புனர்வாழ்வு நிதிக்காக அச்சுவேலி லயன்ஸ் கழகத்தால் 'கொடி தினம்' இவ்வைபவத்தில் டாக்டர் திருமதி. பா. பஞ்சலிங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## புதிய கட்டடம் அமையும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் மத்திய நூல் நிலையத்தில் அடுத்த நிதி ஆண்டில் சிறுவருக்கான புதிய நூல் நிலையக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கொக்குவில் பிரஜை குழு கேட்கிறது

## நெருக்கடியான காலகட்டம்: பொறுப்பற்று இருப்பதா?

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்குப் பிரஜைகள் குழுவினர் 'சமூக நலன் பேணல்' என்ற தலைப்பிட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றினை பொது மக்களுக்கு விநியோகித்துள்ளனர்.

இவ்வேண்டுகோளில், ''சிவில் நிர்வாகம் சீர்குலைந்து எம்மை நாமே கட்டுப்பாடாக நடத்த வேண்டிய நெருக்கடி நிறைந்த இக்காலகட்டத்தில் நாம் பொறுப்பற்றவர்களாகச் செயற்படுவது கவலைக்குரியது. இன்றைய சூழ்நிலையை உணர்ந்து சமூக நலன்களைப் பேணுவதில் பொறுப்புடன் செயற்படுதல் எமது தலையாய கடமையாகும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மின்பாவனை தவிர்த்தல், தெருக்களைப் பேணல், சுற்றுடல் பாதிப்பு, சுகாதாரம் பேணல், பாவனையாளர் பாதுகாப்பு, கசிப்பு உற்பத்தித் தவிர்ப்பு என்பன குறித்தும் இத்துண்டுப் பிரசுர வேண்டுகோளில் வலியுறுத்தப்பட்டுள்ளது

## 'திருவாசகம்தவப்பயன்தந்த தத்துவப் பொக்கிஷமாகும்'

(சாவகச்சேரி)

"திருவாசகம் தமிழினத்தின் தவப்பயனால் கிடைத்த ஒரு தத்துவப் பொக்கிஷம். அது ஒரு பக்தி இலக்கியம். ஊன் கலந்து, உயிர்கலந்து, உவட்டாமல் இனிக்கும். பொருட்செறிவு பெற்று சைவசித்தாந்தத்தையும் பேசும் பக்தித் திருநூல்''

இவ்வாறு சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில், திருவாதிரை நன்னாளை முன்னிட்டு, தென்மராட்சி சைவ மகாசபையினரால் முற்றோதல் செய்யப்பட்ட திருவாசக விழாவில் உரை நிகழ்த்திய இளைப்பாறிய அதிபர் திரு. எஸ். வைரவப்பிள்ளை ஆசிரியர் கூறினார்.

ஆலயப் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில், அம்பாள் விசேட பூசை ஆராதனைகளுடன் திருவாசக முற்றோதல் விழா ஆரம்பமானது.

"திருவாசகத்துள் திருவெம்பாவை, இன்பப் பெருக்கை இனிதூட்டும் இருபது பாடல்களைக் கொண்ட பகுதி. அது ஒரு தத்துவக் கருவூலம், வாதவூராரின் வண்ணத் தமிழ்ப் பொக்கிஷம் இதை பயபக்திப் பரவசத்துடன் ஓதுவது எமக்குக் கிடைத்த பெரும் பேறு. இதைக்கேட்டு பயனடைவோரும் பெரும் புண்ணியம் செய்தவர்களாவர்'' என்றும் திரு. வைரவப்பிள்ளை தனது பேச்சில் கூறினார்.

## வேலணை தெற்கிலும் இச்சங்கம்

(வேலணை)

வேலணை தெற்குப் பகுதியில் உள்ள மக்கள் வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலைய மண்டபத்தில் கூடி மின்பாவனையாளர் சங்கமொன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

இதன் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: திரு. ப சித்திரவேலாயுதம், செயலாளர்: திரு. க. சோதிதாசன், பொருளாளர்; திரு. இ. கதிர்காமு. இம் மின்பாவனையாளர் சங்கத்திற்கு ஆலோசனை வழங்குபவர்களாக திரு. மார்க்கண்டு விஜயசிறி (வேலணைப் பிராந்திய மின் அத்தியட்சகர்) திரு. கா. விஜயரத்தினம் (உப-தபாலதிபர்) டாக்டர் ஐ. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வேலணை மின்பாவனையாளர் சங்க கூட்டம் உப தபாலதிபர் திரு. கா. விஜயரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

## இன்று

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சன சமூக நிலையத்தின் 40வது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று நிலைய மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் புதிய நிருவாகிகள் தெரிவு செய்யப்படுவர்.

## புத்தாண்டு வேண்டுதல்

எத்தனை ஆண்டுகள் நாம் பார்த்துவிட்டோம்
எழில் தவழும் இயற்கை தனில்மாற்ற மில்லை
புத்தழகுச் செங்கதிரோன் பொன்னை யள்ளிப்
பூமுகத்தில் எந்நாளும் பூசிப் போவன்
முத்தொளியைப் பொழிந்தெங்கும் பாலை வார்த்து
முழு நிலவு மகிழ் வருளும் தென்றல் பாடும்
நித்திலஞ்சேர் நீள் கடலின் அலைகள் துள்ளும்
நிறை வாழ்வு பெற மனிதன் நினைப்ப தில்லை

✽ ✽ ✽

அருள் பூத்து மலர்க்குவியல் குலுங்கும் சோலை
அகங்குளிரப் பாடும்புள் ளினத்தின் கீதம்
திருவாழக் கருமுகில்கள் திரண்டு கொட்டும்
தேன்மாரி மலை முகட்டிற் பெருகியோடும்
அருவிகளின் பாய்ச்சலிலே காணும் அன்பு
அனைத்தையுமே கண்டிருந்தும் மனித வாழ்வில்
இருள் மூடி இதயத்திற் களங்கம் கூடும்
இழி நிலை தான் மாறாத மடைமை ஏனோ?

✽ ✽ ✽

புத்தாண்டு மலர்ந்திருக்கும் புனித வேளை
புலனடங்கி அமைதியொடு கடந்த காலம்
பித்தர்களாய் நாம் புரிந்த செயல்க ளெல்லாம்
பின்னோக்கிப் பார்த்திடுவோம் பிறந்த மண்ணில்
எத்தனையோ படுகொலைகள் இரத்த ஆறு
எரிமலைகள் கற் பழிப்பு கொள்ளைக் கோரம்
அத்தனையும் நம் கண்ணைத் திறக்கும் வண்ணம்
ஆண்டவனே வேண்டுகிறோம் புதிய ஆண்டில்

— மறை வேந்தன்.

★ மேற்காசிய விவகாரம் குறித்து

# ஜோர்தான் - சிரிய தலைவர்கள் சந்தித்துச் சம்பாஷணை!

(டமாஸ்கஸ்)

**ஜோர்தான் மன்னர் ஹுசெய்ன் பத்து வருடங்களுக்குப் பின் சிரியாவுக்கு மேற்கொண்டுள்ள விஜயம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக சர்வதேச ரீதியில் கருதப்படுகிறது. மேற்காசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண இவ் விஜயம் பெரிதும் உதவும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இரு நாடுகளும் விரைவில் தூதர்களைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளும் என்றும் ஜோர்தான் அதிகாரி ஒருவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இரு தரப்பு உறவுகளும் மேம்படும் நிலை உருவாகியுள்ளதாக சிரிய செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்துள்ளன.

சிரிய அதிபர் அஸாத்தும் ஜோர்தான் மன்னரும் இரு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தினர் என்றும் டமாஸ்கஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறு இருக்க "லெபனான் போரைச் சமாதானமாகத் தீர்த்து வைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள உடன்படிக்கைக்கு லெபனான் மக்கள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும்" என்று இவ்வுடன்படிக்கை உருவாக மூலகாரணமாக இருந்து செயற்பட்ட சிரிய துணை ஜனாதிபதி திரு கதாம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்கும் அமெரிக்காவின் நிலைப்பாடு என்ன என்பதிலிருந்தே இவ்வுடன்படிக்கையின் வெற்றி தங்கியுள்ளது என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## அமெரிக்க மீது ரஷ்யா சீற்றம்

(மாஸ்கோ)

"1972ஆம் வருடம் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் செய்துகொண்ட உடன்பாட்டை அமெரிக்கா மீறியுள்ளது" என்று சோவியத்தின் உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' கண்டித்துள்ளது.

நிவேடா பாலைவனத்தில் சில தினங்களுக்கு முன் அமெரிக்கா நடாத்திய அணுகுண்டு சோதனையைக் கண்டித்து அது கருத்து வெளியிட்டுள்ளது.

அணுவாயுதக் கட்டுப்பாட்டில் அமெரிக்காவுக்கு ஆர்வம் இல்லை என்பதையே இது புலப்படுத்துகிறது என்றும் அது குற்றஞ் சாட்டியது.

இது இவ்வாறு இருக்க, அணுவாயுத சோதனைகளைத் தற்காலிகமாக நிறுத்துவது என்ற சோவியத்தின் காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது. மேலும் இது நீடிக்கப்படுமா என்பதற்கான அறிகுறி ஏதுமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ரோம், வியன்னா தாக்குதல்கள்: ப. வி. இயக்கம் கண்டனம்

(டுனீஷியா)

ரோமிலும், வியன்னாவிலும் சர்வதேச விமான நிலையங்களில் கெரில்லாக்கள் நடந்திய தாக்குதல்கள் குறித்து பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் திரு. யாஸிர் அரபாத் கண்டனம் தெரிவித்துள்ளார். இத்தாக்குதலில் பதினறு பேர் மடிந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர். இஸ்ரேலிய எயர் லைன்ஸின் பரிசோதனைப் பகுதிக்கருகே இத்தாக்குதல்கள் நிகழ்ந்திருந்தன.

டுனீசியத் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே அரபாத் இக்கண்டனத்தைத் தெரிவித்தார்.

சில அரபு நாடுகளையும் அவர் இவ்வேளை குறை கூறினர். ஆனல் அந்நாடுகளின் பெயர்களை அவர் குறிப்பிடவில்லை.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்குச் சில அரபு நாடுகள் தூண்டுதலாக இருக்கின்றன என்றார் அவர்.

இந்நடவடிக்கையில் உளவுப் படைகளின் தொடர்பும் கூட உண்டென அவர் குற்றஞ்சாட்டினர்.

மேற்காசிய நிலையில் உடன் சமுகத் தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தையும் அவர் வற்புறுத்தினர்.

## அமெரிக்க-சீன உடன்படிக்கை

(பீக்கிங்)

அணுமின்சக்தி நிலையம், சிவில் தொழில் நுட்பத்துறை தொடர்புபட்ட உடன்படிக்கையொன்றில் அமெரிக்காவும் சீனவும் கைச்சாத்திட்டுள்ளன.

சீனத் துணைவெளிநாட்டமைச்சரும், சீனவிலுள்ள அமெரிக்கத் தூதரும் இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்

## புதிய தேர்தல் ஆணையாளர்

(புதுடில்லி)

பாரதத் தலைமைத் தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. ஆர். கே. திரிவேதி இளைப்பாறியதையடுத்து அவரது இடத்திற்கு திரு. பெரிசாஸ்திரி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சட்டத்துறைச் செயலராகக் கடமையாற்றியவராவார்.

## பங்களாதேஷில் மாணவர் பொலிஸார் கைகலப்பு!

(டாக்கா)

எதிர்க்கட்சியினர் மீது பங்களாதேஷ் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு கண்டனம் தெரிவித்து மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்துக்கு அருகேயும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. இருநூறு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தேசியவாத மாணவர் பிரிவைச் சேர்ந்த இரு உயர் தலைவர்களும் இதில் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

## ரூ. 40 லட்சம் கடத்தல் பொருள் சிக்கியது

(சென்னை)

சென்னையில் இருநாட்களாகச் சுங்கப் பகுதியினர் மேற்கொண்ட திடீர் வேட்டையில் நாற்பது இலட்சம் ரூபா பெறுமதிமிக்க கடத்தல் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றில் வைரங்கள், அமெரிக்க டாலர்களும் அடங்கும்.

## இருசிறு அமெ. விமானங்கள் நொருங்கி 10பேர் மடிந்தனர்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் இரு சிறு விமானங்கள் விழுந்து நொருங்கியதில் பத்துப் பேர் கொல்லப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

ஒரு விமானத்தில் அறுவரும், அடுத்த விமானத்தில் நால்வரும் இருந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

## திருமதி வின்னி மண்டேலா 8 தினங்களுக்குள் இரண்டாவது தடவையாகக் கைதானர்!

(ஜொஹனஸ்பேக்)

தென்னபிரிக்காவில் சிறை வைக்கப்பட்டுள்ள தேசியவாதத் தலைவர் திரு நெல்ஸன் மண்டேலாவின் மனைவி திருமதி வின்னி மண்டேலா எட்டு நாட்களுக்குள் இரண்டாவது தடவையாகக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

தனது சொவிடோ இல்லத்துக்குத் தடையுத்தரவையும் மீறி அவர் சென்றபோதே, கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜொஹனஸ்பேக்கிற்கு நாற்பத்தெட்டுக் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றிற்கு அவர் பின் இட்டுச் செல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சவூதி விரைவு

(றியாட்)

ஈரான் மீது ஈராக் பெரும் தாக்குதலை விரைவில் நடாத்த விருப்பதாக வந்த செய்தியையடுத்து ஈரான் வெளிவிவகார அமைச்சர் தாபீக் சுசீஸ் சவூதி அரேபியாவுக்கு பயணமானர்.

சவூதி ஆரேபியா ஈரானுக்கு பெருமளவு உதவிகளை அளித்துவருவதால் மேலும் பல உதவிகளைப் பெறுவதற்கு இவர் அங்கு சென்றார்.

## 1985 திரும்பிப் பார்க்கிறோம்

(நேற்றைய தொடர்ச்சி)

### ஜூலை

1 காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் தீ விபத்து பாதுகாப்பு படையினர் அணைத்தனர்; திஸ்ஸ கடலில் இரு தமிழ் மாணவர் பலி. நெதர்லாந்து 3500 தமிழர்களுக்கு புகலிடம் அளிக்க மறுப்பு; நெடுந்தீவு மரணமானவர்களுக்கு தலா 2500 ரூபா அரச உதவி. 2. போர் நிறுத்தம், பேச்சு வார்த்தையை எதிர்த்து ஊர்வலங்கள் ஆரம்பம், பிரசுரங்கள். போராளிகளை வெளியேற்றுவதாக இந்தியா அறிவித்ததாக லங்கா புவத் தெரிவித்தது. 3 மூதூரில் பொலிஸ். தீவிரவாதிகள் மோதல், தீவிரவாதி ஒருவர் பலி; பூட்டான் மாநாட்டில் பாலசிங்கம் கலந்து கொள்வதாக அறிவிப்பு; போர் நிறுத்தத்தை எதிர்த்து ஊர்வலங்கள். லங்கா புவத் செய்திக்கு தூதுவர் டிக்ஷிற் மறுப்பு. 4. பூட்டான் மாநாட்டில் ஐந்து தீவிரவாதக் குழு கலந்து கொள்வதாக அறிவிப்பு; அவுஸ்திரேலியாவில் வேலை வழங்க விண்ணப்பப் படிவம் விநியோகம். 5. பூட்டான் மாநாடு பற்றி ஜனதிபதி அமைச்சரவையில் அறிவிப்பு. இலங்கை குழு பூட்டான் பயணம்; பயங்கரவாதிகள் என்ற சொல்லை விட அரசு ஆலோசனை. நாலாயிரம் தமிழர் மேற்கு ஜேர்மனி சென்றதாக லங்கா புவத் அறிவிப்பு; 6. ஊரடங்கு இரவு 10 மணிக்கு தளர்த்தல்; கூட்டணித் தலைவர்கள் புதுடில்லி செல்ல முடிவு; தீவிரவாத தலைவர்கள் பூட்டான் செல்ல மறுப்பு. ஒரு இந்திய கப்பல்கள் கடலில் மறைவு. 7. கூட்டணி, தீவிரவாத பிரதிநிதிகள் பூட்டான் பயணம், உமா மகேஸ்வரன் எம். ஜி. ஆருடன் பேச்சு; மயிலிட்டி கடலில் சூடு; தம்பி மரணம், அண்ணன் கைது. கல்வியங்காட்டில் ஒரு இரவு 15 வீடுகளில் கொள்ளை. 8. திம்புவில் பூட்டான் வெளிநாட்டு மந்திரி தலைமையில் மாநாடு. காங்கேசன்துறையில் எண்ணெய் ரயிலை குண்டு வைத்து தகர்க்க முயற்சி, புலிகள் கண்டு பிடிப்பு. 9. யாழ்நகரில் எதிர்ப்பு ஊர்வலம், பிரதமர் ராஜீவின் பிரதிநிதி பூட்டான் பயணம்; ஊரடங்குச் சட்டம் நீக்கம்; பூட்டான் மாநாடு பயனுள்ள முறையில் நடைபெறுவதாக அறிவிப்பு. 11. ஜனதிபதி கொலை முயற்சி; கொட்டாஞ்சேனையில் வானில் குண்டு கண்டு பிடிப்பு; எச். டபிள்யூ. ஜெயவர்த்தன கொழும்பு திரும்பினர்; ஜனதிபதி கொலை முயற்சி தொடர்பாக ஏழு தமிழ் இளைஞர்கள் கைது. ஈரோஸ் ஜனதிபதி கொலை முயற்சிக்கு மறுப்பு. யாழ். மாவட்ட இலங்கைவங்கி கிளைகள் காலை 9 - 12 மணி வரை திறப்பதாக முடிவு. 12. சிறிமாவுக்கு குடியுரிமை வழங்குமாறு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் முன்னறிவித்தல், கைதான 200 தமிழ் இளைஞர்களுக்கு எதிராக வழக்கு தாக்கலாகும் என லலித் பாராளுமன்றத்தில் அறிக்கை; ஜனதிபதி கொலை முயற்சி மேலும் மூவர் கைது. ரஞ்சன் என்ற இளைஞரை தேடி பொலிஸ் வலைவிரிப்பு. 13 பூட்டான் மாநாடு ஒத்திவைப்பு; ஜனதிபதி கொலை முயற்சி ரஞ்சன் தேடப்படுவதாக அரசு அறிவித்தது, ஜனதிபதி றீகனுக்கு சத்திரசிகிச்சை 17,490 தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் இருப்பதாக சட்டசபையில் அறிக்கை 14. அமைச்சர் தொண்டமான் தமிழ்நாடு பயணம்; 643 தமிழ் இளைஞர் பெயர் விபரம் அறிவிப்பதாக லலித் தெரிவித்தார்; ஆயுதப் படை பயிற்சி நிலையங்கள் பல இடத்தில் நிறுவ அரசு முடிவு. 15. கொழும்பு குண்டுவெடிப்பு சம்பவத்தால் பன்னிரண்டு பேர் கைது என அறிவிப்பு; கிளிநொச்சியில் ராணுவம் மூவரை கைது செய்தது; ஒருவர் தற்கொலை; பிரதமர் ராஜீவ் சென்னை விஜயம். எம். ஜி. ஆருடன் அரைமணி நேரம் பேச்சு; மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் மாணவர் ஆர்ப்பாட்டம் 16. தமிழ்க் குழு பூட்டானில் இருந்து சென்னை வந்தன. கட்டுநாயக்க குண்டு வெடிப்பு, மற்றைய குண்டு வெடிப்புகள் ஜெயக்குமார் செய்ததாக அரசு தகவல். லண்டன் கணபதி கோவிலில் தமிழர் தங்கமுடியாது என லண்டன் கவுன்சில் அறிவித்தது. 17. பத்திரிகை தணிக்கை நீக்கம்; ஜனதிபதி கொலைமுயற்சி. நான்கு தமிழ் பெண்கள் உட்பட 35 பேர் கைது. முல்லைத்தீவில் நெதர்லாந்து தூதரக வாகனம் கடத்தல் அமைச்சரவையில் ஹெக்டர் ஜெயவர்த்தன பூட்டான் பேச்சு பற்றி அறிக்கை 18. யாழ். மத்திய கல்லூரி 150வது ஆண்டு விழா, ஜனதிபதி கொலை முயற்சி, ரஞ்சன் குடும்பமும் கைது. சென்னையில் கூட்டணி தலைவர்கள் கூட்டம். 19. பலாலி முகாமில் இருந்து 16 பேர் விடுதலை; தீவிரவாதிகளுக்கு ஆறு கோடி தமிழர் ஆதரவு என நிதியமைச்சர், பேச்சு. 20. இலங்கை அரசின் போக்கு சந்தேகம் என ஈழ, தேசிய விடுதலை முன்னணி சென்னையில் அறிவிப்பு; பொலிகண்டி திக்கம் பகுதிகளில் இரவு ராணுவம் தீவிரவாதிகள் மோதல் வெடிச்சத்தங்கள். வீரர் ஒருவர் பலி எனவும் வடக்கில் யுத்த நிறுத்த மீறல் என்றும் அரசு அறிவித்தது. 21. பூஸாவில் இருந்து 21 பேர் யாழ்ப்பாணம் வந்தனர், வடக்கில் தேங்காய் விலை வீழ்ச்சி, யாழ். நகரில் தெருக் கூத்து 22. காரைநகரில் சீருடையினர் அதிகாலை சுட்டதில் மூவர் பலி, பலர் காயம், இரவு யாழ். மெயிலில் சென்ற மோட்டார் சைக்கிள் பிருசுவிலில் அபகரிப்பு, வடபகுதி டி. ஐ. ஜி. யாழ். விஜயம், நீலன், சூசை கொழும்பு வந்தனர். 23. உப்பு வெளியில் பொலிஸ்காரர் சுட்டுக்கொலை; நிக்கவரட்டிய சம்பவம் தொடர்பாக கைதானவரில் 36 பேர் விடுதலை, திருமலைப்பகுதியில் சிறு அசம்பாவிதம், 10 பேர் மரணம். 24 பாவற்குளத்தில் நீர்ப்பாசன கட்டடம் குண்டு வைத்து தகர்ப்பு; பிரபாகரன் வடக்கே வந்ததாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி; பூட்டான் மாநாடு ஆகஸ்ட் 12 இல் நடைபெறும் என அமைச்சர் குர்சித் ஆலம் கான் லோக்சபாவில் அறிவிப்பு, பஞ்சாப் பிரச்சினை; பிரதமர் ராஜீவ் லோங்கோவால் ஒப்பந்தம். 25. வடக்கில் பூரண ஹர்த்தால்; காலை வந்த யாழ். தேவி யாழ். புகையிரத நிலையத்தில் நிறுத்தப்பட்டது. சாரதி, கார்ட் கடத்தப்பட்டு பின்னர் விடுவிப்பு, வடபகுதி ரயில் சேவைகள் ரத்து, குடாநாடு எங்கும் குண்டுச் சத்தம், மட்டு நகரில் பஸ் தீக்கிரை, கோட்டை ராணுவ வீரர் வவுனியாவில் கடத்தப்பட்டார். 26. யாழ். தேவி என்ஜின் சாவி ஒப்படைப்பு மீண்டும் வடபகுதி புகையிரத சேவை ஆரம்பம், காக்கைதீவில் புதைக்கப்பட்ட மூன்று சடலங்கள் மீட்பு, திருமலையில் நகரசபை உறுப்பினர் சுட்டுக்கொலை, முதல்வர் எம். ஜி. ஆர். யப்பான் பயணம்; திருச்சியில்

(தொடரும்)

ஈழமுரசு

## வெளிநாட்டு விஜயங்களை ராஜீவ் ரத்துச்செய்துள்ளார்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இவ்வாண்டில் பல வெளிநாடுகளுக்கு மேற்கொள்ளவிருந்த விஜயங்களை ரத்துச் செய்துள்ளதாக இங்கிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்தியாவில் பல உள்நாட்டுப் பிரச்சினைகள் இருப்பதால் இவற்றைத் தீர்ப்பதே பிரதமர் காந்தியின் இவ்வாண்டுக்கான முக்கிய பொறுப்பாக இருக்குமென கூறப்படுகின்றது. பஞ்சாப், அஸ்ஸாம் மாநிலப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ள போதிலும், ஜம்மு-காஷ்மீர், மிசோராம் மாநிலங்களில் பல பிரச்சினைகளை அரசு எதிர்நோக்கியுள்ளது.

பிரிகேடியரின் சந்திப்பில் எடுத்த முடிவு

# பலாலி விமான நிலைய அருகாமைக் காணிகளின் குடியிருப்பாளருக்கு விசேஷ அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலைய ஓடு பாதைக்கு அணித்தாயுள்ள காணிகளில் விவசாயம் செய்பவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்படவிருக்கிறது.

மயிலிட்டி வடக்குப் பிரஜைகள் குழுவனர், பிரிகேடியர் வனசிங்காவுடனும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் நேற்று முன்தினம் நேரில் நடத்திய சந்திப்பின் போது மேற்படி தகவல் வெளியிடப்பட்டது.

பலாலி விமான நிலையப் பகுதியில் விவசாயம் செய்வோர் ஒரு வார காலத்துள் அப்பகுதியிலிருந்து வெளியேறி விட வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டதையடுத்து மேற்படி பிரஜைகள் குழுவினர் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் மகஜர் கையளித்து நேரில் முறையிட்டதன் பேரில் அவர் பிரஸ்தாப உயர் பாதுகாப்புப் படை அதிகாரிகளுடன் நேரில் சம்பாஷித்து முறையிட ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார்.

பலாலி இராணுவ முகாமில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது பின்வரும் இணக்கங்களும் காணப்பட்டன.

⁂ உயர்ந்து வளரும் பயிர்கள் தவிர்ந்த பயிர்களைத் தொடர்ந்தும் பயிரிட விவசாயிகளை அனுமதித்தல்.

⁂ விமான ஓடு பாதைக்கு அணித்தாயுள்ள பற்றைகளையும், மறைப்பு வேலிகளையும் அகற்றுதல்.

⁂ விமான ஓடு பாதையின் மேற்கு எல்லையில் மிகவும் அணித்தாயுள்ள இரு கல் வீடுகளையும், நான்கு கொட்டில் வீடுகளையும் சற்று தூரமாக வேறு இடத்திற்கு மாற்றியமைத்தல்.

⁂ பீதியின் காரணமாக இருப்பிடங்களை விட்டு வெளியேறி பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வளவுள் அமைந்திருக்கும் சாதனா பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ள, விமான ஓடு பாதையின் தென்கிழக்குப் பகுதியில் வசித்து வந்தவர்களை மீண்டும் பழைய இடங்களில் குடியமர்த்துவது முடியாததாகையால் அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு வேறு முடிக்குரிய காணியில் குடியமர்த்த வேண்டிய ஒழுங்குகள் செய்தல்.

## சிறீபி வெளியீட்டு சுவரொட்டி

சிறீபி வெளியீட்டுப் பிரிவால் 'விழித்திருப்போம்' என்ற தலைப்புடன் நேற்று வெளியிடப்பட்ட சுவரொட்டிகளில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"உயர்த்திய கரங்களில் ஒழுகிய - குருதி எமது புரட்சிக்கு சாயம். இன்று சூழ் வடிவும் அபாயம் - இந்த அசிங்கம் துடைக்க - எமது கரங்களை மீண்டும் உயரே உயர்த்திக்காயப்படுத்துவோம்.

ஆம், ஒடுக்கப்பட்ட மக்கள் - நாம் புரட்சியில் உறுதியாய் இருப்போம்!!"

## கோட்டை....

பாலரட்ணம்; ஐயர் யோகராசா.

கந்தசாமி சிவக்குமார்; கந்தசாமி ஸ்ரீதரன்; கணபதி பாலசுந்தரம்; கந்தையா சுந்தரலிங்கம்; தெய்வேந்திரன் நவரட்ணராசா; வைரவசுந்தரம் ஜெயசீலன்; வேலுப்பிள்ளை கோபாலபிள்ளை; மாணிக்கம் ராசலிங்கம்; நல்லையா ஜெகதீஸ்வரன்.

## ராஜீவை, எம்.ஜி, ஆர்....

கவும் அவர் தெரிவித்தார்.

புதுடில்லி செல்லும் முன் தான் முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரனை சென்னையில் சந்திக்கவிருப்பதாகவும் அவர் தகவல் வெளியிட்டார்.

## யாழ் மாவட்ட....

கவென ஒதுக்கப்பட்ட நிதியிலும் மேலதிகமாக இப்பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொகுதி ரீதியாக ஆகக்கூடியது 7500 ரூபா வீதம் கடனாக வழங்கப்படும். பகுதி பகுதியாக வழங்கப்படும் இக்கடன், பின்னர் பகுதி பகுதியாகவே அறவிடப்படும். பத்துலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகளை அமைக்கவே 52 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## தங்களின் பாரம்....

ஒவ்வொரு தேசிய இனமும் தமது ஆட்சியை ஏற்படுத்திக் கொள்வதே தேசியவாதமாகும்.

1930ம் ஆண்டு தேசியவாதம், மார்க்ஸிஸவாதம் என்பன பார்ஸிஸவாதம் எனக் கருதியவர்கள் இன்று 1940க்கு பின் முக்கியமாக மூன்றுவது உலகநாடுகளில் தேசியவாதம் ஒரு முற்போக்கானது என்பதை உணருகின்றனர்.

1949ல் தமிழரசுக்கட்சி ஆரம்பமானது சரித்திரத்தில் தமிழர்கள் மட்டில் ஒரு தேசியவாதத்தை ஏற்படுத்தியது. 1956க்கு பின்னர் இது கூர்மையடைந்தது. இதற்கு நாட்டின் இரு இடதுசாரி இயக்கங்கள் தமிழர்களின் உரிமைகளுக்கு குரல் கொடுக்கத் தவறிவிட்டமையுமே காரணமாகும்.

1983 கலவரத்துக்கு முன்னர் தெற்கே தொழிலதிபர்களும், முதலாளிகளுமாக தமிழர்கள் இருந்தனர். ஆனால் இன்று அவையில்லை. அதே வேளை பல்கலைக்கழகத் தரப்படுத்தல் முதலியவையும், தமிழ் எம்.பிக்களின் அரசியல் குரல் தடுக்கப்பட்டது. இவற்றினால் பல்கலைக்கழக பிரவேசத்துக்கு முற்பட்ட மாணவர்கள் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டி ஏற்பட்டது. இந்த இளைஞர்களின் அரசியற கோட்பாடு ராணுவ செயற்பாடுகளுக்கு எதிராக இருப்பதை நாம் அவதானிக்கலாம் என்றார்;

இந்தியா பற்றி குறிப்பிட்ட அவர் தெற்காசியாவிலேயே ஒரு சக்திவாய்ந்தது எனவும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழ்நாடு கொண்டுள்ள அக்கறை பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவும் சொன்னார்.

● பிரதம கல்வி அதிகாரி கூறுகிறார்

## ஆசிரியர் இடமாற்றத்தில் சங்கங்கள் தலையிடுவதால் மாணவரே பாதிப்படைவர்

(வயாவிளான்)

"மாவட்டத்துக்குள்ளேயே, அதிலும் ஒரு பாடசாலையில் மட்டும், நியமனம் பெற்றநாள் தொடக்கம் எந்தவித இடமாற்றமுமின்றிக் கற்பித்துக் கொண்டிருக்கும் பல ஆசிரியர்கள் யாழ். மாவட்டத்துக்குள் இருப்பதனைப் பார்த்து மிகவும் வருந்துகின்றேன். இவ்வாறு நன்மை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களினால் வெளிமாவட்டங்களில் நிரந்தரமாகவே கடமையாற்றிக் கொண்டிருக்கும் பலருக்கு சொந்தமாவட்டத்துக்கு வந்து கடமை புரிய வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. மாவட்டத்துக்குள்ளே இருக்கும் கஷ்டப் பிரதேசங்களிலே கூட கடமை புரிய இவர்கள் விரும்புவதில்லை. அவ்வாறு கல்வித் திணைக்களத்தால் ஆவர்கள் கடமை புரிய அனுப்பப்பட்டாலும் ஆசிரியர் தொழிற்சங்கள் தலையிடுகின்றன. இவ்வாறான தலையீடு எமது மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது."

இவ்வாறு வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் தமிழர் ஆசிரியர் சங்கத்தினாலும், சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனம், ப்ரெடரிக் ஈபேட் மன்றம் ஆகியவற்றினால் கூட்டாக ஒழுங்குபடுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கின் இறுதி நாளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. எஸ். சுந்தரலிங்கம் அவர்கள் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் நீண்ட விடுமுறைகளைத் தாம் அனுபவிப்பதற்காகவென நினைக்கக்கூடாது, பாடங்களினை சரியான முறையில் ஆயத்தம் செய்யவே அந்த விடுமுறைகளைப் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் சொன்னார்.

## ஈழத் தமிழர்....

ழர்களைக் கொன்று குவிப்பது வருந்தத் தக்கது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக சட்டமேலவைத்தலைவர் திரு ம. பொ. சிவஞானம் புதிய ஆண்டிலேனும் தமிழர் பிரச்சினை நல்ல முறையில் தீர்க்கப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பிறக்கும் புதிய ஆண்டு ஈழத் தமிழர்களுக்கும், தமிழக மக்களுக்கும் இன உணர்வுஇன உரிமை போன்றவற்றை ஏற்படுத்துவதாக அமைக்க வேண்டுமென திராவிடர் கழகப் பொதுச் செயலர் திரு. கீ. வீரமணி வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழர்களின் பிரச்சினை தீர்ந்து அவர்கள் உரிமை பெற்று வாழும் ஆண்டாகப் புதிய ஆண்டு மலரும் என காந்தி காமராஜ் தேசிய காங்ரஸ் தலைவர் திரு. குமரி ஆனந்தன் தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

## வட்டக்கச்சி...

ருக்கையில் ராணுவச் சூட்டுக்கு இலக்கான வட்டக்கச்சியைச் சேர்ந்த அ. வசீகரன் காயத்துடன் நேற்றிரவு ஒன்பது மணியளவில யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஒரு இலட்சம்....

திரு. விநாயக மூர்த்தியின் மரணம் தொடர்பான தகவல் தருபவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படுமென்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

## தமிழீழ....

பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக அங்கு படும் கஷ்டங்களைத் தாம் நேரில் கண்டதாகவும் அவர் கூறினார்.

## ராஜீவ் ...

இப் பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதற்கு உதவும் நிலையில் பாரதம் உறுதியாக இருக்கிறது என திரு. டிக்ஸிற் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பயனுள்ள உடன்பாடு காண இலங்கை அரசு முன்வர வேண்டும் எனவும், இலங்கையில் அப்பாவி மக்கள் வன்முறைகளால் கொல்லப்படுவதையிட்டு பாரதம் கவலையடைவதாகவும் திரு. டிக்ஸிற் தெரிவித்தார்.

## தமிழர் படுகொலை....

இலங்கை அரசின் நடவடிக்கைகளை கண்டிக்குமாறு, தமிழர்களை அழிப்பதனை நிறுத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டுமெனவும் உலகின் மனச்சாட்சிக்கே இந்த வேண்டுகோளை விடுப்பதாகவும், இதனைத் தட்டிக் கேட்க எவருமில்லையா எனவும் இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தமிழர்களை அழிப்பதில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசு தென்னாபிரிக்கா இனவெறி அரசைவிட மோசமானதென்பதை நிரூபித்துவிட்டதென" வும் கூட்டணியின் அரசியல் குழு தெரிவித்துள்ளது.

## இன்ரசிற்றி....

கட்டணம் 125 ரூபாவாக இருந்தது. வடபகுதி புகையிரத சேவை ஊழியர்களுக்கு விசேஷ பாதுகாப்பு அலவன்ஸ் வழங்குவதற்காக இக்கட்டண உயர்வு கொண்டுவரப்பட்டுள்ளது.


## மரண அறிவித்தல்

### A. S. அருளானந்தம்

A. S. அருளானந்தம் (சமாதான நீதவான், இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்) காலமாகிவிட்டார். இவர் பத்தரின் ஞானம்மாவின் அன்புக் கணவரும், அன்ரனி ஜான்ஸ் அருளானந்தம் (பேராசிரியர், அவுஸ்திரேலியா), அஞ்சலின் பற்றிசியா அரியம் (முன்னைநாள் உத்தியோகத்தர், நீதி அமைச்சு), அல்பிரட் யூஜின் அருளானந்தம் (கணக்காளர், கனடா), அனிக்லிற திமோதி அருளானந்தம் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), அஞ்சலோ மரியன் அருளானந்தம் (பொறியலாளர், கொங்கொங்), அட்ரியஸ் பவாப்சிலி அருளானந்தம் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), அலெக்ஸ் யூலியஸ் அருளானந்தம் (Com. Eng. Student U.K.) ஆகியோரின் அருமைத் தந்தையும், ஈடித் அன்ரனி (பேராசிரியர், அவுஸ்திரேலியா), அரியம் யோசெப் (மின் முகாமி, U. A. E) டொமினி அல்பிரெட் (B. Sc., Hons. கனடா), சாந்தி அனிக்கிலிற் (ரசாயன பகுப்பாளர், அவுஸ்திரேலியா), அலைஸ் இமல்டா அஞ்சலோ (சட்டத்தரணி, கொங்கொங்), சரோ அலெக்ஸ் (Air Lanka, U. K. Office), ஆகியோரின் அருமை மாமனாரும், சுஹாசிஸ் அல்பிரட் (கனடா), டயனு அனிக்கிளிற (அவுஸ்திரேலியா) ரேமல் அலெக்ஸ் (U.K.) ஆகியோரின் அருமை பேரனுமாவார். அன்னாரது இறுதிச் சடங்கு விபரம் பின் அறிவிக்கப்படும்.

M. J. DHRMARATNAM.

St Jude, 79, Cathitral Road, Jaffna. R15246


"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 87, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 1-1-86 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23836